# செய்தி மடல் 4
# வென்ற்வேத்வில் தமிழ்க்கல்வி நிலையம்

## NEWSLETTER 4 -2010
**WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE INC.**

**P.O. Box 557, WENTWORTHVILLE - 2145**
**Web Site:http:// www.wtsc.org.au**
**Email : info@wtsc.org.au**

13-11-2010

## WTSC - EVENT CALENDAR FOR Term 4, 2010

| | | Performance and தமிழ்மொழி வாழ்த்து | | Week | | |
|---|---|---|---|---|---|---|
| | Dates | Darcy | Girraween | | SCHOOL ACTIVITIES/MEETING | EXAMS/ASSESSMENTS |
| | 2-Oct-10 | | HOLIDAY | | | |
| | 9-Oct-10 | | HOLIDAY | | | |
| TERM 4 | 16-Oct-10 | | | 1 | | |
| | 23-Oct-10 | Yr9/10 | Yr11/Yr12 | 2 | | எழுத்துப் போட்டி |
| | 30-Oct-10 | Yr9/10 | Yr9/10 | 3 | | |
| | 6-Nov-10 | Yr8/ PS | Yr8/ PS | 4 | | வினாவிடைப் போட்டி |
| | 13-Nov-10 | Yr7/K | Yr7/K | 5 | | வினாவிடைப் போட்டி |
| | 20-Nov-10 | Yr 6/Yr 1 | Yr 6/Yr 1 | 6 | | வினாவிடைப் போட்டி |
| | 27-Nov-10 | Yr 5/ Yr 2 | Yr 5/ Yr 2 | 7 | | இறுதி ஆண்டுப் பரீட்சை |
| | 4-Dec-10 | | | 8 | | |
| | 11-Dec-10 | Yr 3/Yr4 | Yr 3/Yr4 | 9 | | |
| | 12/12/2010 - Annual Dinner/AGM/Award Ceremony | | | | | |
| | 18-Dec-10 | Yr2/Yr5 | Yr2/Yr5 | 10 | இந்த ஆண்டிற்கான இறுதி நாள் வகுப்பு | |

# எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் இராப்போசன விருந்தும்

எமது பாடசாலை பரிசளிப்பு விழாவும் இராப்போசன விருந்தும் டிசம்பர் மாதம் 12ம் திகதி (12-12-2010) ) ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 4:30 மணிக்கு Campbell Street, Blacktown இல் அமைந்துள்ள Bowman Hall இல் நடைபெறும். அன்றைய தினம் எமது பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் பேச்சு, எழுத்து, வாசிப்பு மற்றும் வினா விடைப் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெறும். பரிசளிப்பு விழா இம்முறை சரியாக 4:30 மணிக்கு ஆரம்பமாகும். எனவே மாணவர்கள் அனைவரும் மண்டபத்திற்கு குறித்த நேரத்தில் சமூகமளிக்குமாறு கேட்கப்படுகின்றார்கள்.

வழமைபோல இம்முறையும் மண்டபம் ஒழுங்கு செய்வதற்கு பெற்றோர்களிடம் இருந்து உதவிகள் தேவைப்படுகின்றது. உதவி செய்ய விரும்பும் பெற்றோர்களை 12ம் திகதி 10:30 மணியளவில் மண்டபத்தில் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக தகவல்களுக்கு உபதலைவர்கள் திரு. த. சிவராசா (0409 032 287), திரு. இ. இராஜேஷ்வரன் (0400 363 395) ஆகியோரை தொடர்பு கொள்ளவும்.

வழமைபோல் செயற்குழுவினர் உங்களிடம் தொடர்புகொண்டு உணவுப்பண்டங்களை தயாரிக்க உதவி கேட்டு அதற்கான படிவங்களை ஏற்கனவே மாணவர்களிடம் கொடுத்துள்ளார்கள். இதில் ஒவ்வொரு குடும்பத்தினரிடமிருந்தும் நாம் எதிர்பார்க்கும் உணவு வகைகளின் விபரம் தரப்பட்டுள்ளது. **பெற்றோர் இந்தப் பத்திரத்தை நிரப்பி சனிக்கிழமை 20 November 2010 இற்கு முன்னர் செயற்குழு உறுப்பினர்களிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.** இந்த படிவம் கிடைக்காதவர்கள், இதற்கான படிவத்தை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் இவ் ஆண்டிற்கான பொதுக்கூட்டமும் 2011ம் ஆண்டிற்கான நிர்வாகக் குழு தெரிவு செய்தலும் அதே நாளில் நடைபெறும். எனவே பெற்றோர்கள் அனைவரும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்கப்படுகின்றார்கள். அடுத்த ஆண்டிற்கான நிர்வாகக் குழு அங்கத்தவராக விரும்பும் பெற்றோர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நியமனப்பத்திரத்தை பூர்த்தி செய்து செயலாளரிடம் 10-12-2010 அன்று மாலை 5:00 மணிக்கு முன்பாக கையளிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள். இந் நிகழ்விற்கு சமூகமளிக்க முடியாதவர்கள் “Form of Appointment of Proxy” ஐ பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## இந்த ஆண்டுக்கான தவணைக் கட்டணத்தையும் கலாச்சார நிதியையும் செலுத்தி விட்டீர்களா?

இவ்வருடத்திற்கான பாடசாலை தவணைக் கட்டணத்தையும், கலாச்சார நிதியையும் இதுவரை செலுத்தாத பெற்றோர்கள் **தயவுசெய்து** அவற்றைக் கூடிய விரைவில் செலுத்தியுதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் கடந்த ஆண்டிற்கான தவணைக் கட்டணத்தையும் செலுத்தாத பெற்றோர்கள் **தயவுசெய்து** அதனையும் கூடிய விரைவில் செலுத்தியுதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்

## பாடசாலையின் இரு வளாகங்களையும் இணைப்பதற்கான தீர்மானம் பற்றிய அறிவிப்பு

பாடசாலையின் இரு வளாகங்களையும் இணைப்பதற்கான தீர்மானம் பற்றிய அறிவிப்பு இந்த செய்தி மடலுடன் மேலதிக இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

## ஆண்டு இறுதிப்பரீட்சை

இந்த ஆண்டுக்கான இறுதியாண்டுப் பரீட்சை 27-11-2010 அன்று நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். அத்துடன் நியூசவுத்வேல் தமிழ்ப்பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடாவருடம் நடாத்தப்படும் பரீட்சை 11-12-2010 அன்று நடைபெறும். அனைத்துப் பரீட்சைகளிலும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற எமது வாழ்த்துக்கள்.

## பெற்றோர்களின் கவனத்திற்கு!!

### 1. பாடசாலை நேரம் :

பிள்ளைகளை பாடசாலைக்கு நேரத்திற்கு அனுப்பி வைக்குமாறும், முடிவடையும் போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

ஆரம்பமாகும் நேரம் : பிற்பகல் 2:00 மணி முடிவடையும் நேரம் : பிற்பகல் 4:30 மணி

முன்பள்ளி, ஆரம்பப்பள்ளி மாணவர்களை அவர்களின் வகுப்பிலிருந்து பிற்பகல் 4:20 இற்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## 2. மாணவர் அறிக்கை

2ம் தவணையில் உங்களிற்கு தரப்பட்ட Report Card ஐ இதுவரை உங்கள் வகுப்பாசிரியரிடம் கொடுக்காத மாணவர்கள், அவற்றை உடனடியாக கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## 3. தமிழ்ப் பாடசாலைக்கு உதவி செய்தல்

வகுப்பு இடைவேளையின் போது, குளிர்பாணம் வழங்குவதற்கும், மாணவர்களை மேற்பார்வை செய்வதற்கும், பெற்றோர்களின் உதவி மிகவும் தேவையாக உள்ளது. பெற்றோர்கள் தாமாகவே வந்து உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## 4. இணயத்தளமும் , மின்னஞ்சலும்

எமது இணையத்தளத்தை தவறாது பார்த்து பாடசாலை சம்பந்தமான அறிவித்தல்களையும், மற்றைய வளங்களையும் பெற்றுக்கொள்ளலாம். மேலும் நாம் parents@wtsc.org.au என்ற மின்னஞ்சல் மூலம் எமது அறிவித்தல்களை உடனுக்குடன் அறியத்தருவோம். உங்களது மின்னஞ்சல்களில் மாற்றம் ஏற்பட்டால் எமக்கு அறியத்தரவும். info@wtsc.org.au எனும் மின்னஞ்சல் மூலம் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

## 5. பாடசாலை விடுமுறை ( School Holiday )

நான்காம் தவணைக்கான இறுதி வகுப்புக்கள் 18/12/2010 அன்று நடைபெறும். இதைத்தொடர்ந்து பாடசாலை விடுமுறையின் பின்னர் மீண்டும் 29/01/2011 அன்று புதிய ஆண்டுக்கான வகுப்புகள் ஆரம்பமாகும்.

## 6. கலைவிழா புகைப்படங்கள்

கலைவிழா புகைப்படங்களுக்கும், ஒளிவட்டுக்கும் முன்பதிவு செய்தவர்கள் அதனை அலுவலகதில் பெற்றுக்கொள்ளவும்.